3897

Madras Legislative Council Debates

THIRTY-FIRST SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

28th February and 1st, 2nd and 4th to 8th March 1968.

Volume LXXIV (Nos. 1 to 8)

TABLE OF CONTENTS.

PAGES

Wednesday, 28th February 1968.

Personnel of the Government of Madras i

Principal Officers of the Madras Legislative Council ii

List of Members of the Madras Legislative Council with their constituencies ... ... iii-v

I Questions and Answers 1–22

II Announcements—

(1) Message from the Governor 22

(2) Nomination of a Member to the Business Advisory Committee 22

III Presentation of the Budget for 1968–69 ... 22–27

IV Papers laid on the table of the House ... 27–28

Friday, 1st March 1968.

I Questions and Answers 155–172

II Point of information *re* answers to questions addressed to the Hon. the Chief Minister ... 172

III Government Motions—

(1) Election of nine members to the Committee of Privileges 172–173

(2) Election of six members to the House Committee 173–174

IV General discussion on the Budget for 1968–69 174–206

PAGES

Saturday, 2nd March 1968.

I Questions and Answers 209–233

II Adjournment motion *re* disturbances outside the Aruvankadu Cordite Factory and shooting near the Police station 233–244

III General discussion on the Budget for 1968–69 (*cont.*) 244–259

IV Papers laid on the table of the House ... 259–260

Monday, 4th March 1968.

I Questions and Answers 273–286

II Calling attention to termination of services of Non-Basic Trained Teachers from Senior (Aided) Basic Schools in Kollidam Range of Sirkali Taluk, Mayuram Educational District 286–287

III General discussion on the Budget for 1968–69 (*cont.*) 287–317

Tuesday, 5th March 1968.

I Welcome to a new Member 319

II Questions and Answers 319–333

III Adjournment Motion *re* attack by unruly elements on Thiru E. V. K. Sampath and two others 333–335

IV Calling attention to failure of Government to fix salary of Sanskrit Pandits in Board High Schools in Madurai district 336

V General discussion on the Budget for 1968–69 (*cont.*) 336–368

VI Papers laid on the table of the House ... 368

Wednesday, 6th March 1968.

I Questions and Answers 371–388

II Announcements—

(1) Decision of the Business Advisory Committee 388

(2) Election of six members to the House Committee 389

PAGES

Wednesday, 6th March 1968—cont.

III General discussion on the Budget for 1968–69 (*cont.*) 389–417

IV Papers laid on the table of the House ... 417–418

Thursday, 7th March 1968.

I Questions and Answers 421–440

II Announcement *re* election of nine members to the Committee of Privileges 440–441

III Calling attention to hardship caused to agriculturists and businessmen due to levy of multipoint sales tax on procurement and sales of chillies in Madurai district ... 441–442

IV General discussion on the Budget for 1968–69 (*cont.*) 442–477

V Papers laid on the table of the House ... 477–478

Friday, 8th March 1968.

I Questions and Answers 481–494

II General discussion on the Budget for 1968–69 (*cont.*) 494–530

III Papers laid on the table of the House ... 531

Index 533–564

Administration in Tamil

*112 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state —

(a) the names of Departments of the Government of Madras where Tamil was ordered to be used for administration by the previous Government ;

(b) the Government Departments where Tamil has been ordered to be used by the new Government ;

(c) the number of Government Departments which are still carrying on the administration in English ; and

(d) the date from which the administration will be carried on in Tamil by these Departments also ?

தமிழில் நிர்வாகம்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மேற்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழக அரசின் எந்தெந்த இலாக்காக்களில் தமிழில் நிர்வாகத்தை நடத்த பழைய அரசு உத்தரவிட்டிருந்தது ?

(இ) புதிய அரசு எந்த இலாகாக்களுக்குத் தமிழில் நிர்வாகத்தை நடத்த உத்தரவிட்டுள்ளது ?

(உ) இன்னும் எத்தனை இலாகாக்கள் ஆங்கிலத்தில் நிர்வாகம் நடத்திக்கொண்டிருக்கின்றன ?

(எ) எப்போதிலிருந்து இந்த இலாக்காக்களிலும் நிர்வாகம் தமிழில் நடத்தப்படும் ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) பழைய அரசின் உத்தரவுகளுக்கிணங்க ஆட்சிமொழித் திட்டத்தைச் செயல்படுத்துவதில் அடைந்த முன்னேற்றங்கள் :—

(1) மாவட்ட நிலையிலுள்ள அலுவலகங்களில் தமிழ்த் திட்டம் எல்லாத் துறைகளிலும் முழு அளவில் செயற்படுத்தி உத்தரவிடப்பட்டது.

(2) துறைத் தலைவர் அலுவலகங்களில் படிப்படியாக தமிழ்த் திட்டத்தைத் தொடங்கிவைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது.

(3) அரசு தலைமைச் செயலகத்தில் தமிழ்த் திட்டத்தின் முதல் நிலையைச் செயற்படுத்த உத்தரவிடப்பட்டது.

(இ) புதிய அரசு அமைந்தபின் தலைமைச் செயலகத்தில் தமிழ் வளர்ச்சித்துறையின் எல்லாப் பிரிவுகளிலும், செய்தி விளம்பரத் துறையிலும் தமிழ்த் திட்டத்தை முழு அளவில் செயற்படுத்த ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது ; இதற்கு முன் ஆட்சிமொழிச் சட்டத்தின் கீழ் கொண்டு வரப் பெறுமல் விட்டுப்போன மாவட்ட நிலை வரையிலுள்ள சில அலுவலகங்களில் தமிழ்த் திட்டத்தை முழு அளவில் செயற்படுத்த அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

(உ) இதுவரை தகவல்கள் சேகரிக்கப்படவில்லை.

(எ) இதுவரை எற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டு, ஏற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

28th February 1968]

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, சர்க்காரால் வெளியிடப்படும் "கெஜட்" இன்னும் ஆங்கிலத்தில் வருகிறது. அதை எப்போது முதல் தமிழில் கொண்டுவர முயற்சி எடுக்கப்படும் ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, "கெஜட்" பற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

Monuments

* 113 *Q.*—THIRU N.R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state the steps taken by the Madras Government in safeguarding the monuments like forts and palaces located at Vellore, Thanjavur, Gingee and Madurai ?

நினைவுச் சின்னங்கள்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

வேலூர், தஞ்சாவூர், செஞ்சி, மதுரை ஆகிய இடங்களில் இருக்கும் கோட்டைகள், அரண்மனைகள், முதலிய நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்கத் தமிழக அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (1) வேலூர்க்கோட்டை—இக்கோட்டை தற்போது இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் பாதுகாக்கப்படுகிறது. அங்குள்ள கோயில் உட்பட இக்கோட்டையையும் அதைப் பாதுகாக்கும் பொறுப்பையும் இந்த அரசாங்கத்திடம் ஒப்படைக்குமாறு இந்திய அரசை இம்மாநில அரசாங்கம் கேட்டுக் கொண்டு வந்துள்ளது. இந்திய அரசு ஒப்புக்கொள்ளவில்லை. அக்கோட்டையை இந்த மாநில அரசாங்கத்திடம் ஒப்படைக்கச் சம்மதிக்குமாறு இந்திய அரசை வலியுறுத்தக் கருதப்பட்டுள்ளது.

(2) செஞ்சிக்கோட்டை—இக்கோட்டை இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையால் பாதுகாக்கப்பட்டுவருகிறது.

(3) தஞ்சாவூர் கோட்டை :—இக்கோட்டையை மாநிலப் பொதுப் பணித்துறையினர் இப்போது பேணிவருகிறார்கள். மாநிலச் சிறப்பு மிக்க நினைவுச் சின்னமாக இதைப் பாதுகாக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

(4) திருமலை நாயக்கர் மகால், மதுரை:—தற்போது இது மாநிலப் பொதுப்பணித் துறையினரின் பொறுப்பில் உள்ளது. மாநிலச் சிறப்புமிக்க தொல்பொருள் நினைவுச் சின்னமாக இந்த மகாலைப் பேண முடிவு செய்யப்பட்டுள்ளது. இக்கட்டிடத்தை எதிர்காலத்தில் பேணி வருவதற்காக, பொதுப் பணித் துறை இதனை மாநிலத் தொல்பொருள் துறையிடம் விரைவில் ஒப்படைக்கும்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, மதுரையில் திருமலை நாயக்கர் மகால் சமீபத்தில் பழுதடைந்து விட்டதாகவும், அதை மராமத்துப் பார்க்க போவதாகவும் தெரிந்தது. அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெஞ்செழியன் : தலைவரவர்களே, இதை பொதுப்பணித் துறை இதுநாள் வரை பேணி வந்தது. இப்போது அதைப் பாதுகாக்கும் முழுப்பொறுப்பையும் மாநிலத் தொல்பொருள் துறையிடம் கொடுக்கும் முயற்சிகள்தான் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன.

28th February 1968]

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்: (அ) & (இ) மன்றத்தின் முன் ஒரு அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவரவர்களே, ஹரிஜன பையன்கள் மெடிகல் கல்லூரிக்கு எடுக்கும்போது 40 சதவீதம் மார்க் வாங்கினால் போதுமென்று தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். பின்னர் பரீட்சை எழுதும்போது 50 சதவீதம் எடுத்தால்தான் பிரி மெடிக்கல் கோர்ஸில் தேர்ந்தெடுக்கப்படும் நிலையிருக்கிறது. இந்தக்காரணத்தால் 100-க்கு 10 பேர் கூட தேறுவதற்கு கஷ்டமான நிலையிருக்கிறது. ஆகவே ஹரிஜன மாணவர்களை அதிலேயும், தேர்ந்தெடுப்பதற்கு சலுகை கொடுப்பதைப் போல, பாஸ் செய்வதற்கும் சலுகை கொடுக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இப்போது நடைமுறையில் சேர்த்துக்கொள்வதற்கு மட்டும்தான் வசதி கொடுக்கப்பட்டிருக்கிறது. பாஸ் செய்வதற்கு மற்றவர்களோடு சேர்ந்து படித்து தேறும்வழிதான் இருக்கிறது. இதற்குச் சலுகை கொடுக்கப் படுமானால் மற்ற எம்.எஸ்.வி. போன்றவைகளுக்கும் கொடுக்க வேண்டிவரும். அவர்களுக்குச் சலுகை கொடுத்து ஊக்குவிக்க வேண்டுமானால் பயிற்சி கொடுத்தல், அதிக கவனம் செலுத்தல் போன்ற காரியங்களில் தான் வாய்ப்பு ஏற்படுத்தலாமே தவிர தேர்வு எண்களில் வேறுபாடு காட்ட இயலாது.

திரு என். ஆர். தியாகராஜன்: தலைவரவர்களே, மூன்றுமுறை தான் பரிட்சை எழுதலாம் என்று இருக்கிறது. அதை மாற்றி தேவைப்பட்ட தடவைகள் எழுதும் சலுகை கொடுக்க சர்க்கார் முன்வருமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, முதல் ஆண்டில் மூன்று தடவை என்று வரையறை இருக்கிறது. மறுபடியும் எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும் எழுதலாம் என்றிருக்கிறது. தனிப்பட்ட மாணவர்களுக்கு சங்கடங்கள் வரும் போது அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை எழுதுவதற்குச் சலுகை கொடுக்கும் வரையறை இருக்கிறது. அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

திரு சி. வி. ராசகோபால்: தலைவரவர்களே, இப்போது கேட்கப்பட்ட மாணவர்கள் அர்சுன மாணவர்கள் என்று சொல்லப்பட்டது. அது அர்சுன மாணவர்களைப் பற்றியதா ? அல்லது ஹரிஜன மாணவர்களைப் பற்றியதா ? எந்த மாணவர்கள் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

Usage of Pure Tamil Words

* 118 *Q.*—THIRU N.R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether orders have been issued to Government Books Publishers and the Government Departments that only chaste and pure Tamil words, unmixed with English, Sanskrit or other language should be used ;

(*b*) if so, the Departments to which such orders have been issued ; and

(*c*) the Departments which have implemented the order ?

* Printed as Appendix I on page 29

தூய தமிழ்சொற்களைக் கையாளல்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆங்கிலம், வடமொழி அல்லது பிறமொழி கலக்காத தூய தமிழ் சொற்களைக் கையாள வேண்டும் என்று சர்க்கார் புத்தக பிரசுரகர்த்தர்களுக்கும், சர்க்கார் இலாகாக்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளதா ?

(இ) எந்தெந்த இலாகாவுக்கு உத்திரவிடப்பட்டது?

(உ) எவை எவை அமுல் செய்தது ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) & (உ) கேள்விகளுக்கு இடமில்லை.

திரு என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, கல்வி இலாகாவிலிருந்து உயர்நிலைப் பள்ளிகளுக்குச் சுற்றறிக்கை வந்திருப்பதாக நம்பகரமான செய்தி மூலம் கேள்விப்பட்டேன். எந்தக் காரணத்தை முன்னிட்டும் வடமொழி அல்லது பிறமொழிகளைக் கலக்காமல் தனித்தமிழில், தூய தமிழில், தெள்ளு தமிழில் கூடுமானவரை நடவடிக்கைகள் இருக்கவேண்டுமென்று சுற்றறிக்கை அனுப்பப் பட்டதாகத் தெரிகிறது? அது அமைச்சருக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது போல் "கூடுமானவரையில்" என்ற சொற்றொடர் இருக்குமானால் அதில் தவறில்லை. கூடுமான வரையில் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்த வேண்டுமென்பது குறிக்கோள் தான். "மைக்ரபோன்" என்பதற்கு ஒலிப்பெருக்கி என்று சொல்லப் படுகிறது. முடியுமானால் அப்படியே அர்த்தத்தை வைத்துக்கொண்டு சொல்வது என்றும், இல்லாவிட்டால் பிற வார்த்தைகளை அப்படியே சொல்வது என்றும் இருக்கிறது. இதில் மூன்று வகை சொல்லப்படுகிறது. இருக்கிற தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்திக் கொள்வது என்பது ஒன்று இல்லாதபோது எளிதான சொற்களை உருவாக்கிக் கொள்வது எனபது இரண்டு ; இது இரண்டும் இல்லாதபோது மற்ற சொற்களை அப்படியே தழுவி வைதத்துக்கொள்வது எனபது ஆக மூன்று வகை யிருக்கின்றன.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, இந்தச் சுற்றறிக்கை யின் பயனாக ஈஸ்வர விலாஸ் என்ற ஹோட்டலில், அந்தப்பெயரில் உள்ள "ஈஸ்வர" என்ற வார்த்தையின் காரணமாக அந்த ஹோட்டல்காரரைப் பிடித்து அடித்திருக்கிறார்கள். கலவரம் செய்து இருக்கிறார்கள். அது மாத்திரமல்ல. போலீஸ்காரர்கள் அந்த ஹோட்டல்காரரையும் கைது செய்திருக்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. இதெல்லாம் உண்மையா? தூய தமிழில் எழுத வேண்டுமென சுற்றறிக்கை அனுப்பப்பட்டதால் ஏற்பட்ட விளைவுகளா இவை ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தமிழ் உணர்ச்சியிருப்பதால் கலவரம் செய்யும் மனப்பான்மை இருக்க வேண்டுமென்பது அவசியமில்லை. அறிக்கை விட்டதன் மூலம் அந்த மனப்பான்மை வந்தது என்று சொல்ல முடியாது. நானும் கூட நல்ல தமிழில் எழுத வேண்டுமென்ற விருப்பமுடையவன்தான். ஆனால் அவ்வாறு செயலில் ஈடுபட முடியவில்லை. அந்தச் செயலின் அடிப்படையான காரணங்கள் வேறுக இருக்கலாம். இந்த அறிக்கையின் மூலம்தான் ஏற்பட்டது என்று சொல்வதற்கு இல்லை. அண்மையில்கூட நான் கல்லூரிகளுக்குச் சொல்கிறபோது, அறிவியல் நூல்களைக் கொண்டு வருகிறபோது "இண்டர்நேஷனல் டர்மினாலஜி" என்ற முறையில் பயன்படுத்தலாம் என்று சொல்லி இருக்கிறேன். உதாரணமாக ஆக்ஸிஜன, ஹைட்ரஜன் போன்ற சொற்களை அப்படியே பயன்படுத்தலாம். வேண்டுமென்றால் இன்னும்

20 அல்லது 25 ஆண்டுகளுக்குப் பிறகு அதற்குறிய தமிழ்ச் சொற்களை நடைமுறைக்குக் கொண்டு வரலாம். இப்போது புகுமுக வகுப்புகளில் கரியமிலவாயு, உயிர்க் காற்று போன்றவைகளைத் தமிழில் படித்துவிட்டு மேல் படிப்பிற்குச் செல்லும்போது ஆக்ஸிஜன், ஹைட்ரஜன் என்று படிப்பதில் மிகவும் சிரமமாக இருக்கும். ஆகவே அப்படிப்பட்ட சொற்களை அப்படியே பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் இருக்கிறது.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவரவர்களே, கனம் உறுப்பினர் திரு. சிற்றரசு அவர்கள், தன்னுடைய சின்ன ராஜு என்ற பெயரை எடுத்துவிட்டு தமிழில் சிற்றரசு என்று வைத்துக்கொண்டதுபோல் என்னுடைய பெயரைத் தமிழில் வைக்கவேண்டும். எப்படி வைப்பது என்று யோசனை கூறுங்கள் என்று கேட்டேன். நீண்ட நேரம் யோசனை செய்தும் முடியவில்லை. இப்போது கிறிஸ்துவர்கள், மூஸ்லீம்கள் எல்லாம் தமிழ்ப் பேர் இல்லாத ரோமானிய அராபியப் பேரை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதை மாற்ற வேண்டுமென்று கலவரம் நடக்குமா? அப்பொழுது அரசு என்ன செய்யும்?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, கலவரம் ஒன்றும் நடக்காது. அது அவரவர்கள் மனதைப் பொறுத்த ஒன்றாகும். தியாகராஜன் என்பதற்குப் பதிலாக கொடையரசன் என்று வைத்துக்கொள்ளலாம். தியாகம் என்றால் கொடை, ராஜன் என்றால் அரசன் ஆகும். ஆகவே கொடையரசன் என்று வைத்துக்கொள்ளலாம். அப்படிக் கேட்பார்களானால் நாமே சொல்லலாம். அப்படியே தான் மாற்றிக் கொள்ளவேண்டுமென்பதில்லை. நான் என்னுடைய பெயரையே எடுத்துவிட்டு வேறு பெயரை வைத்துக் கொண்டேன். அப்படியும் செய்யலாம்.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவரவர்களே, சுகாதார அமைச்சர் சாதிக் பாஷா அவர்களுக்குத் தமிழில் என்ன பெயர் என்று சொல்லுவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, சாதிக் என்றால் உண்மை, பாஷா என்றால அரசன், ஆக உண்மையரசன் என்று சொல்லலாம்

Withered Paddy Fields

* 119 *Q.*—THIRU M. SANKARALINGAM PILLAI: Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the extent of the paddy fields, taluk-wise in Tirunelveli District in which paddy withered as a result of non-availability of water; and

(*b*) the measures undertaken to give relief to the affected ryots?

கரிந்து போன நெல் வயல்கள்

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை: மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் 1967–ல் தண்ணீரில்லாமல் கரிந்துபோன நெல்வயல்களின் பரப்பளவு, தாலுகா வாரியாக எவ்வளவு?

(இ) பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு எந்தெந்த வகையில் நிவாரணம் அளிக்கப்பட்டது?

தொழிற்சாலை அமைக்க திட்டமிடப்பட்டிருக்கிறது. இத்தகைய தொழிற் சாலை எண்ணூரில் விரைவில் ஆரம்பிக்கப்படும். நேரடியாக ஜப்பானுக்கும் அமெரிக்காவிற்கும், மற்ற வெளிநாடுகளுக்கும் அனுப்புகிற நிலைமை விரைவில் ஏற்படும்.

திரு. எம். அய்யாசாமி : தலைவரவர்களே, எண்ணூரில் ஆரம்பிக்க இருக்கிற இந்த தொழிற்சாலை அரசாங்க சார்பில் நடத்தப்படுமா? அல்லது தனியார் துறையில் நடத்தப்படுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தனியார் துறையில்தான்.

MR CHAIRMAN : Question No. 144 is postponed.

Fort St. George Gazette

*145. *Q.*—THIRU N. R. THIAGARAJAN . Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether all parts of the Fort St. George Gazette are published in English and Tamil ; and

(*b*) if all the parts of the Fort St. George Gazette are not published in Tamil, whether there is any proposal to publish them in Tamil also ?

மாநில அரசிதழ்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாநில அரசிதழின் எல்லாப் பகுதிகளும் ஆங்கிலத்திலும், தமிழிலும் வெளியிடப்படுகிறதா?

(இ) தமிழில் மாநில அரசிதழின் எல்லாப் பகுதிகளும் வெளியிடப் படவில்லையென்றால், அப்பகுதிகளை தமிழில் வெளியிடும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) தமிழ் நாட்டின் அரசிதழின் எல்லா பாகங்களும் ஆங்கிலத்தில் வெளியிடப் படுகின்றன. தவிர, தமிழ்நாட்டு அரசிதழின் இரண்டாம் பாகத்தின் 1-வது, 2-வது பிரிவுகளுக்கும், மூன்றும் பாகத்திற்கும், நான்காம் பாகத்தின் 1-வது 3-வது 4-வது பிரிவுகளுக்கும், ஐந்தாம் பாகத்துக்கும் தேவையான போதெல்லாம் இணைப்புகள் தமிழில் வெளியிடப்பட்டு வருகின்றன.

(ஆ) மாநில அரசிதழின் எல்லாப் பகுதிகளையும் தமிழில் வெளி யிடும் செயற்குறிப்பு எதும் தற்போது இல்லை.

Construction of houses for Harijans.

*146 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have proposed to construct houses at a cost of Rs. 1,500 each for all the Harijans in Tamil Nad ; and

(*b*) whether it is a fact that the Government have issued orders that these houses should not be constructed on wet lands ?